



கோலாலம்பூர், ஆக. 27-

தேசிய ஒற்றுமையை மேலும் வலுப்படுத்துவதற்குத் தாய்மொழிப் பள்ளிக்கூடங்களை அகற்ற வேண்டும் என்று பெர்சத்து கட்சியின் இளைஞர் பிரிவுத் தலைவர் வான் அகமட் ஃபைசால் வான் அகமட் கமால் வெளியிட்டிருக்கும் அறிக்கை தேவையற்றது என்று மஇகா தேசியத் துணைத்தலைவர் டத்தோஸ்ரீ எம். சரவணன் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கண்டனத்தைப் பதிவுசெய்தார்.

பக்கம் 13

## தாய்மொழிப் பள்ளிகளை அகற்றச் சொல்லி

# பிதற்றாதீர்

### பெர்சத்து இளைஞர் தலைவருக்கு டத்தோஸ்ரீ சரவணன் பதிலடி

முதல் பக்கத் தொடர்ச்சி...

## தாய்மொழிப் பள்ளிகளை...

அவருடைய இந்த அறிக்கை 1957ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்தது முதல் மலேசியா கடைப்பிடிக்கும் சுதந்திரமான கல்வி நடைமுறைகளுக்கு எதிரானது என்றார் சரவணன்.

நாட்டின் பல்வேறு இனங்களிடையே தோற்றுவிக்கப்பட்டுள்ள இன ஐக்கியத்திற்கும் எதிரானதாக வான் அகமட் ஃபைசாலின் அறிக்கை அமைந்துள்ளது.

தாய்மொழிப் பள்ளிகள் தேசிய ஒற்றுமைக்கு இடையூறாக இருப்பதாகவோ அல்லது தேசப்பற்று மிக்க மாணவர்களை உருவாக்குவதில் தோல்விகண்டுவிட்டதாகவோ ஆதாரம் ஏதும் இல்லை என்று அவர் மேலும் சொன்னார்.

பல இன மக்களின் தாய்மொழி வளர்ச்சிக்குத் தாய்மொழிப்பள்ளிகள் முக்கியப் பங்கினை ஆற்றியுள்ளன. அதுமட்டுமன்றி தாய்மொழிப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றவர்கள் தேசியத் தலைவர்களாக நாட்டுக்குப் பல ஆண்டுகள் சேவையாற்றியுள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் நிர்மாணிப்பில் அவர்கள் ஆற்றிய பங்கைக் கொண்டாட வேண்டுமே தவிர தேசிய ஒற்றுமைக்கு இடையூறை ஏற்படுத்திவிட்டதாக வசைபாடக்கூடாது என்றார் அவர்.

அரசியல்வாதிகள் தங்கள் அரசியல் நலனுக்காக இனத்தையும் சமயத்தையும் ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது என்று சரவணன் நினைவுறுத்தினார்.

தற்போதுள்ள கல்வி நடைமுறை மிக நீண்டகாலமாகப் பயன்பாட்டில் உள்ளது. அதுமட்டுமன்றி தாய்மொழிப் பள்ளிக்கூடங்கள் தேசிய ஒற்றுமையை வலுப்படுத்துவதில் தோல்விகண்டு விட்டதாகவோ அல்லது தேசியமொழியை அலட்சியம் செய்துவிட்டதாகவோ இதுவரை நிரூபிக்கப்படவில்லை.

ஆனால், தாய்மொழிப் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்றவர்கள் வெளிநாடுகளில் மலேசியா பெருமைப்படும் அளவுக்குச் சாதனைகளைப் படைத்திருக்கின்றனர்.

உலக அளவில் வெளிநாடுகளில் நடத்தப்பட்ட அறிவியல், கணிதப் போட்டிகளில் தாய்மொழிப் பள்ளிக்கூட மாணவர்கள் வெற்றிகளைக் குவித்திருக்கின்றனர்.

மலேசிய சமுதாயத்தில் ஒரு பிரிவினரின் ஆதரவைத் திரட்ட சில அரசியல்வாதிகள் இனத்தையும் சமயத்தையும் தங்கள் அரசியல் பாதையாகப் பயன்படுத்துவது குறித்து கவலைப்படுகின்றேன் என்றார் அவர்.

Makkal Osai, pg 1 & 13, 27 Ogos 2020

Akhbar : Makkal Osai

Tarikh : 27 Ogos 2020

Muka surat : 1 & 13

Tajuk : **Jangan berleter untuk menghapuskan sekolah vernakular. Pembalasan Datuk Seri Saravanan kepada Ketua Pemuda Bersatu.**

Ringkasan : Timbalan Presiden MIC Datuk Seri M. Saravanan membantah kenyataan yang dikeluarkan oleh Ketua Pemuda Bersatu yang ingin membanteras sekolah vernakular bagi mengukuhkan perpaduan. Kenyataan Ketua Pemuda Bersatu bercanggah dengan laporan pelajaran yang dikeluarkan pada tahun 1957 dan mengugat kebebasan berpendidikan. Datuk Seri M. Saravanan berkata, setakat ini tiada bukti yang menyatakan sekolah vernakular menjadi halangan untuk menyemai perpaduan sesama rakyat ataupun gagal menanam sikap patriotik dalam diri murid-murid. Sekolah-sekolah vernakular ini memainkan peranan dalam peningkatan pendidikan ibu bahasa. Selain itu, ramai yang berpendidikan di sekolah vernakular yang berjasa baik untuk pembangunan negara. Beliau juga mengingatkan ahli politik supaya jangan salah guna kuasa dengan isu agama dan bangsa untuk memainkan politik. Beliau meneruskan lagi dengan bukti kejayaan yang diraikan oleh murid-murid sekolah vernakular di peringkat antarabangsa..